செய்தி வெளியீடு எண்: 49 நாள் : 16.01.2011.

# பஞ்சமி நிலம் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகள் அளித்திட ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.மு. மருதமுத்து தலைமையில் குழு! முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக சட்டப்பேரவையில் கடந்த 7.1.2011 அன்று அளிக்கப்பட்ட ஆளுநர் உரையில், “தமிழகத்தில் பல்லாண்டு காலத்திற்கு முன்பு வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்களை, பஞ்சமர்கள் அல்லாதவர்கள் பட்டா மாறுதல் செய்து வைத்திருப்பதாகவும், காலப்போக்கில் அவற்றைப் பல்வேறு தரப்பினர் ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருவதாகவும், ஆக்கிரமிப்பு செய்த நிலங்கள் பலவற்றில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளதாகவும்; ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டு, கிரயம் செய்யப்பட்டுப் பலருக்குக் கைமாற்றப்பட்டுள்ளதாகவும்; அடிக்கடி அரசுக்கு முறையீடுகள் வருவதோடு, ஏடுகளிலும் செய்திகள் வருகின்றன. பஞ்சமி நிலம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளையும் சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு, பரிசீலனை செய்து, அவர்களிடமே திரும்ப ஒப்படைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைகள் வழங்குவதற்கு, உயர்நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் குழு அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.’’ – என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், தமிழகத்தில் உள்ள பஞ்சமி நிலங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகள் வழங்கிட சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.மு. மருதமுத்து அவர்கள் தலைமையில், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திரு.ஐ.வி.மணிவண்ணன், திரு.வி.கருப்பன், நிலநிர்வாக ஆணையர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்றை நியமித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**